**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 271/2022

நாள்: 07.03.2026

பெயர்: ராமநாதன் (பி.வா.சா.2) த/பெ: கிருஷ்ணசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை...**

1. எனது சொந்த ஊர் முஷ்ணம் காமராஜர் நகர். வாதிகள் மூவரையும் தெரியுமா என்றால் அவர்கள் சிறு வயதில் இருக்கும் பொழுது தெரியும். வாதியின் தகப்பனார் ராஜேந்திரனை தெரியுமா என்றால் தெரியும். ராஜேந்திரனின் மனைவி வீரம்மாளை தெரியுமா என்றால் தெரியும். ராஜேந்திரன், வீரம்மாளும் தஞ்சாவூரான் சாவடியில் உள்ள அவரது சொந்தகாரரான பெரியசாமி வீட்டில் தங்கி விட்டு செல்வார்கள். எனது தகப்பனார் தான் கிருஷ்ணசாமி. 01.03.1989வாதிகளின் தகப்பனார் ராஜேந்திரனிடம் எனது அப்பா கிருஷ்ணசாமி ரூ.3,500/- கடனாக பெற்றுக்கொண்டு தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கினார் என்றால் சரிதான். ரூ.3,500/- ஐ செலுத்தி விட்டு மீண்டும் எனது அப்பா சொத்தை மீட்டுவிட்டார். ஆனால் அது தேதி, வருடம், மாதம் நினைவில் இல்லை. 5 வருடங்கள் கழித்து கடன் அடைக்கப்பட்டது. கடனை திரும்பி பெற்றுக்கொண்டு பத்திரம் கொண்டு வருவதாக சொல்லி சென்றார்கள் பின்பு வரவில்லை. எனது அப்பா கடனை திரும்ப செலுத்தவில்லை என்றால் சரியல்ல. கடனை திருப்பி செலுத்தாத காரணத்தினால் ராஜேந்திரன் தனது மனைவியிடம் Made Over 07.07.1989 ல் கொடுத்து விட்டாரா என்றால் தெரியாது.

2. கடன் திரும்பி செலுத்தப்பட்டு விட்டதால் பத்திரத்தை ரத்து செய்து தரும்படி வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது வேறு எதுவும் நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. அல்லது ராஜேந்திரனும் அவரது மனைவியும் இறந்த பின்னர் அவரது வாரிசுக்கு ஏதேனும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினீர்களா என்றால் இல்லை. ஊரில் அவர்கள் யாரும் இல்லை அதனால் அறிவிப்பு தரவில்லை. வாதிகள் மூவரும் திருமணம் செய்து கொண்டு வெவ்வேறு ஊரில் குடியிருந்து

வருகிறார்கள் அதனால் அவர்களுக்கு அறிவிப்பு கொடுக்க முடியவில்லை. வாதிகள் உள்ளூரில் இல்லாத காரணத்தினால் அந்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பத்திரத்தை ரத்து செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கடன் அடைக்கப்பட்டதாக பொய்சாட்சியம் சொல்கிறனே் என்றால் சரியல்ல. சாட்சி தாமாக முன்வந்து கடன் கொடுக்கப்பட்ட காரணத்தினால் எனது அப்பா பிரதிவாதிகள் பெயரில் உயில் எழுதி வைத்தார் என கூறுகிறார். அதன் பெயரில் பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாறிவிட்டதாக கூறுகிறார். எனது அப்பா உயில் எழுதி வைக்கும் பொழுது நானும் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். வாதியின் தகப்பனாரிடம் வாங்கிய அடமான கடனை ஏமாற்ற வேண்டி பொய்யாக 23.04.1991 ஆம் வருடம் அந்த உயில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. அந்த உயில் சட்டப்படி செல்லத்தக்கது என்றும் அமலுக்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கடனை அடைத்ததற்கு உண்டான அதிகாரப்பூர்வமான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த தாவா சொத்தை நாங்கள் கடனை திருப்பி அடைக்கும் வரையில் வாதிகளின் தப்பனார் தான் அனுபவம் செய்து வந்தார். வாதிகளின் தாயும் தகப்பனாரும் இறந்து விட்டதால் அதை பயன்படுத்தி வாதிகள் சிறு வயதாக உள்ளார்கள் என்பதால் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. உரிய கால கட்டத்தில் கடனை திருப்பி செலுத்தாத காரணத்தினால் தாவா சொத்து வாதிகளுக்கு தான் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு தாவா சொத்தில் சட்டப்படியான அனுபவ பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/–ராமநாதன்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/–S.தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி ஜெயங்கொண்டம்